# 9 வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்

மரம் வளர்ப்போம் மரம் வளர்ப்போம்
குழந்தைகளே வாருங்கள்!
மரத்தால் விளையும் நன்மைகளைச்
சொல்வேன் கொஞ்சம் கேளுங்கள்!



கைத்தடியும் கூடைகளும்
கைப்பிடியும் தந்திடும்
கட்டும் வீட்டில் கதவு சன்னல்
அத்தனையும் வழங்கிடும்

ஆடும் மயிலும் பாடுங்குயிலும்
அழகிய கிளியும் தங்கிடும்
மருளும் மானும் பிளிறும் களிறும்
குதிக்கும் குரங்கும் வாழ்ந்திடும்

காட்டு மரங்கள் குறைவதினால்
இயற்கைச் சூழல் கெட்டிடும்
வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்
இயற்கை வாழ்வை மீட்போமே!

- கோ. பெரியண்ணன்

## சொல் அறிமுகம்

### වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்மை | - | යහපත් |
| 2. | இயற்கை | - | ස්වාභාවික |
| 3. | கைத்தடி | - | සැරයටිය |
| 4. | அத்தனை | - | සියලු |
| 5. | சூழல் | - | පරිසරය |
| 6. | மீட்போம் | - | මුදගනිමු |
| 7. | களிறு | - | ඇතා |
| 8. | பிளிறும் | - | කුංචනාදය කරයි |
| 9 | மருட்சி | - | භය/තිගැස්ම |

**இப்பாடலில் வந்த சொற்றொடர்களைப் பிரித்து பார்ப்போம்.**

**මෙම කවියේ තිබෙන වචන විසන්ධි කර බලමු.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i | கைத்தடி | - | கை | + | தடி |
| ii | கைப்பிடி | - | கை | + | பிடி |
| iii | காட்டுமரங்கள் | - | காடு | + | மரங்கள் |
| iv | பாடுங்குயில் | - | பாடும் | + | குயில் |
| v | வீட்டுக்கொரு | - | வீட்டுக்கு | + | ஒரு |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. மரத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் பொருட்கள் எவை?

2 இப்பாடலில் கூறப்பட்டுள்ள மிருகங்கள் நான்கின் பெயர்களை எழுதுக.

3 காட்டு மரங்கள் குறைவதால் என்ன நிகழும்?

4 மரங்களிலிருந்து கிடைக்கும் பயன்கள் எவை?

5. வீட்டுக்கொரு மரம் வளர்ப்பதால் ஏற்படும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

6. மரங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் ஐந்தை பூரண வாக்கியங்களாக எழுதுக.

## செயற்பாடு - I

**பின்வரும் அட்டவணையைப் பாடலில் தரப்பட்ட சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்வோம்.**







## செயற்பாடு - II

**வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் எழுதுவோம்.**

ගස් වවමු යන මාතෘකාවෙන් දැන්වීම් පත්‍රිකාවක් ලියමු.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# மொழி வளம்

## பறவைகளின் தொனிகள்
## පක්ෂීන්ගේ හඬ.

| | | | |
|---|---|---|---|
| i | காகம் | - | கரையும் |
| ii | குருவி | - | கீச்சிடும் |
| iii | குயில் | - | கூவும் |
| iv | கோழி | - | கொக்கரிக்கும் |
| v | சேவல் | - | கூவும் |
| vi | கிளி | - | பேசும் |
| vii | மயில் | - | அகவும் |
| viii | புறா | - | குறுகுறுக்கும் |

## மிருகங்களின் ஆண் - பெண்
## සතුන්ගෙන් - පිරිමි - ගැහැනු

| | **பொது** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|---|
| ⊙ | யானை | களிறு | பிடி |
| ⊙ | குரங்கு | கடுவன் | மந்தி |
| ⊙ | மாடு | நாம்பன் | நாகு |
| ⊙ | ஆடு | கடா | மறி |
| ⊙ | நாய் | கடுவன் | பெட்டை |
| ⊙ | பூனை | கடுவன் | பெட்டை |

## வேற்றுமைகள்

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். இது 8 வகைப்படும். பெயர்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் பகுதிக்கு ‘ உருபு ’ என்று பெயர்.
அவையாவன,

### முதலாம் வேற்றுமை

இதற்கு உருபு இல்லை.

உதாரணம் :

1. அழகான பேனை.
2. அவர் ஒரு நல்ல ஆசிரியர்.
3. இது எங்கள் பாடசாலை.
4. ஒரு பாட்டு பாடுங்கள்.
5. மரக்கறிக் கடை எங்கே உள்ளது?

### இரண்டாம் வேற்றுமை

உருபு ‘ ஐ ’

உதாரணம் :

1. பாலைக் குடியுங்கள்.
2. அம்மாவைக் கூப்பிடுங்கள்.
3. புத்தகத்தைத் தாருங்கள்.
4. கடவுளை வணங்குவோம்.
5. கரும்பலகையை அழியுங்கள்.

### மூன்றாம் வேற்றுமை

உருபுகள் ‘ ஆல் ’ ‘ ஒடு ’

உதாரணம் 1 : ‘ ஆல் ’

1. ஆசிரியர் பிரம்பால் அடித்தார்.
2. பேனையால் எழுத வேண்டாம்.
3. பென்சிலால் எழுதுங்கள்.
4. மரத்தால் செய்த பேனை.
5. கத்தியால் வெட்டினான்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உதாரணம் 2 : ‘ ஓடு ’

1. நண்பியோடு விளையாடினேன்
2. அம்மாவோடு பாடசாலை சென்றேன்.
3. நாயோடு பூனையும் சோறு சாப்பிட்டது.
4. அப்பாவோடு தம்பி வந்தான்.
5. ரகுவோடு கண்ணன் வந்தான்.

## நான்காம் வேற்றுமை

உருபு ‘ கு ’

உதாரணம் :

1. நான் கடைக்குச் சென்றேன்.
2. தம்பிக்கு ஒரு பென்சில் வேண்டும்.
3. செடிக்கு நீர் ஊற்றுங்கள்.
4. பாடசாலைக்குச் செல்லுங்கள்.
5. நூலகத்துக்குச் சென்று புத்தகம் வாசியுங்கள்.

## ஐந்தாம் வேற்றுமை

உருபு ‘ இல் ’ ‘இன் ’

உதாரணம் 1 : ‘ இல் ’

1. மரத்தில் அழகான பூக்கள் இருந்தன.
2. பாடசாலையில் நிறைய கட்டடங்கள் உள்ளன.
3. இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது.
4. பேனையில் மை இல்லை.
5. புத்தகத்தில் அழகான படங்கள் இல்லை.

உதாரணம் 2 : ‘ இன் ’

1. பாடசாலையின் பெயர் என்ன?
2. அந்த மரத்தின் பூக்கள் அழகானவை.
3. இது அப்பாவின் டயரி.
4. இலங்கையின் மிக நிண்ட ஆறு மகாவலி.
5. யானையின் கண்கள் மிகவும் சிறியவை.

## ஆறாம் வேற்றுமை

உருபு ‘ அது ’

உதாரணம் :

1 இது தங்கையினது சட்டை.

2 கிளியினது சொண்டு சிவப்பு நிறம்.

3 இது ரமணியினது பென்சில்.

4 மாட்டினது கொம்பு.

5 மரத்தினது இலைகள் கீழே விழுந்தன.

## செயற்பாடு - III

**பின்வரும் பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுவோம்.**

**உதாரணம்**

| | ஐ | ஆல் | கு | இல் |
|---|---|---|---|---|
| ஆசிரியர் | ஆசிரியரை | ஆசிரியரால் | ஆசிரியருக்கு | ஆசிரியரில் |

| | | ஐ | ஆல் | கு | இல் |
|---|---|---|---|---|---|
| 1. | கத்தி | | | | |
| 2. | மாலினி | | | | |
| 3. | நான் | | | | |
| 4. | நாங்கள் | | | | |
| 5. | கைத்தடி | | | | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - IV

**பின்வரும் சொற்களோடு வேற்றுமை உருபுகளைச் சேர்த்து வாக்கியங்களில் எழுதுவோம்.**

உதாரணம்

மான் + ஐ = மானை = நாம் மானை வளர்ப்போம்.

1. கைத்தடி + ஐ :- ---------------------------------------
2. கத்தி + ஆல் :- ---------------------------------------
3. மாலினி + கு :- ---------------------------------------
4. புத்தகம் + இல் :- ---------------------------------------

## செயற்பாடு - V

**தடித்த எழுத்திலுள்ள சொற்கள் ஏற்றுள்ள வேற்றுமை உருபுகளை இனங்கண்டு எழுதுவோம்.**

1. **பென்சிலால்** படம் வரைந்தான்.
2. **கிளியினது** நிறம் பச்சை.
3. நான் **கதவைத்** திறந்தேன்.
4. **எனக்குப்** பரிசு கிடைத்தது.
5. **காட்டில்** மானும் குரங்கும் வாழுகின்றன.

## செயற்பாடு - VI

**பின்வரும் சொற்கள் இரண்டையும் வைத்து முதல் ஆறு வேற்றுமை உருபுகளும் புலப்படுமாறு வாக்கியம் அமைப்போம்.**

1. அரசன்
2. தந்தை



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக